Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 68/2020**

**Deposition of PW.7 (LW.9)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாமியப்பன் | ஜாதி | : | |
| த/பெ | : | சாமிக்கண்ணு | தொழில் | : | வனவர், அழகர்கோவில் பிரிவு, அழகர்கோவில் சமூக வனச்சரகம், திண்டுக்கல் வனக்கோட்டம் |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | 57/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.12.2025.

( A5, A9, A10 ஆஜர் . A1, A2, A3, A4, A7, A11, A14 ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது. A6, A8, A12, A13 are died)

**முதல் விசாரணை**

நான் தற்போது வனவராக அழகர்கோவில் சமூக வனச்சரக அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.02.2004 அன்று கன்னிவாடி வனச்சரகம் செம்பட்டி பிரிவு, பெரியூர் பீட் வனக்காவலராக பணிபுரிந்த போது, வனகாப்பாளர் திரு. முருகையா அவர்களுக்கு செம்பட்டி பிரிவு வனவர் திரு. மகேந்திரன் அவர்கள் மூலம் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் நானும், வனக்காப்பளர் திரு. முருகையா அவர்களும் கன்னிவாடி வனச்சரக அலுவலகத்திற்கு வந்தோம். நானும், வன்காப்பாளர் முருகையா அவர்களுடன் கன்னிவாடி வனச்சரகம் சென்றபோது வனச்சரக அலுவலர் திரு. வடிவேல் அவர்கள் தலைமையில் கன்னிவாடி பிரிவு வனவர் பிச்சை, செம்பட்டி பிரிவு வனவர் மகேந்திரன், கோட்டைவெளி பீட் வனக்காப்பளர் அப்பச்சி, வனக்காவலர் சின்னச்சாமி, கன்னிவாடி பீட் வனக்காப்பளர் சேர்வராயன், வனக்காவலர் சாமிக்கண்ணு, சித்தையன்கோட்டை பீட் வனக்காப்பளர் ராஜாராம் ஆகியோர் அங்கு இருந்தனர். அப்போது வனச்சரக அலுவலர் திரு. வடிவேல் அவர்கள் அனைவரையும் பார்த்து கன்னிவாடியில் குடியிருக்கும் திருமலைசாமி மகன் ராஜாராம் என்பவர் தோட்டம் அமைந்துள்ள தோணிமலை பட்டா நிலத்தில் அடையாளம் தெரியாத நபர்கள் தோதகத்தி மரங்களை அறுத்துக்கொண்டிருப்பதாகவும், நடவடிக்கை எடுக்கும் படியும் தெய்வேந்திரன் என்பவர் மூலம் கடிதம் கொடுத்தார்கள் என்று கூறினார். எனவே மேல கண்ட குழுவினர் அனைவரும் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்று எதிரிகளை பிடித்து பொருள்களை கைப்பற்றுமாறு கூறியதன் அடிப்படையில் அனைவரும்

உடனடியாக கன்னிவாடியில் இருந்து தோணிமலைக்கு சென்றோம். தோணிமலை பிரிவில் இறங்கி நடந்து பட்டா நிலத்திற்கு சென்றபோது, ஒரு கும்பல் தோதகத்தி மரங்களை வெட்டி சாய்த்து, செதுக்கிக்கொண்டு இருந்ததை கண்டு அவர்கள் அருகில் நெருங்கி சுற்றி வளைத்து பிடித்தோம். அதில் 7 நபர்கள் பிடிபட்டனர். 28 செதுக்கிய தோதகத்தி கட்டைகளும், 2 செதுக்கப்படாத உருட்டு கட்டைகளும் கண்டுபிடிக்கப்பட்டது. அவர்கள் வைத்திருந்த ரம்பம், கோடாரி, வெட்டருவாள் ஆகியவற்றை கைப்பற்றினோம். நில உரிமையாளர் மற்றும் தெய்வேந்திரன் ஆகியோரும் அப்போது சம்பவ இடத்தில் உடன் இருந்தனர். வனச்சரக அலுவலர் உத்தரவின் படி சம்பவ இடத்திலேயே பார்வைமகசர் கன்னிவாடி பிரிவு வனவர் திரு. பிச்சை அவர்களால் தயார் செய்யப்பட்டது. அதில் நானும் கையொப்பம் இட்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் சாட்சியாக போடப்பட்டுள்ள கையெழுத்துக்களில் என்னுடைய கையெழுத்து மட்டும் **(அ.சா.ஆ.24/PW.7)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. H. நமுனா கன்னிவாடி பீட் வனக்காப்பளர் திரு. சேர்வராயன் அவர்களால் தயார் செய்யப்பட்டது. கன்னிவாடி பீட் வன்காப்பாளர் திரு. சாமிக்கண்ணு அவர்களால் வரிசை எண் கொடுக்கப்பட்டது. செம்பட்டி பீட் வனவர் மகேந்திரன் என்பவரால் டேப் மூலம் அளவு எடுக்கப்பட்டது. பிடிபட்ட 7 எதிரிகளையும், பிடிபொருட்களையும் வனச்சரக அலுவலம் கொண்டு வந்து, வனச்சரக அலுவலர் முன்னிலையில் ஆஜர் படுத்தினோம்.இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட 28 செதுக்கப்பட்ட தோதகத்தி கட்டைகள், 2 உருட்டு கட்டைகள் ஆகியவற்றை நில உரிமையாளரான ராஜாராம் அவர்களிடம் ஒப்படைத்து, அவரிடம் கட்டைகளை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் கடிதம் பெற்றோம்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor